**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** | **E.சித்தையன்** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |

<u>சுற்றறிக்கை / 02-2018</u>  <u>03-02-2018</u>

அன்புடையீர்

வணக்கம். இந்திய மின்சார சட்டம் 1948-ன்படி 1.7.57-ல் துவக்கப் பட்ட தமிழ்நாடு மின்சாரவாரியம் 60 ஆண்டுகள் முடித்து, வைரவிழாவில் மின்சார உற்பத்தி, விநியோகம், தொடரமைப்பு முதலியவைகளில் பிரம்மாண்ட வளர்ச்சி பெற்று தமிழகத்தின் தொழில் வளம், விவசாய மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் முதலியவைகளுடன் பொதுமக்களின் அத்தியாவசிய மின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது.

மின்சாரவாரியத்தில் இத்தகைய பிரம்மாண்ட வளர்ச்சிக்குப் பின் ஏற்கனவே பணியாற்றி ஓய்வு பெற்ற 95 ஆயிரம் பணியாளர்களும், தற்போது பணியிலிருக்கும் 85 ஆயிரம் தொழிலாளர்கள், மற்றும் அலுவலர்களும் முக்கிய காரணமென்றால் அது மிகையாகாது.

மின்சாரவாரிய தொழிலாளர்களுக்கு கடந்த 60 ஆண்டுகளில் 11 முறை ஊதியம் மாற்றியமைக்கப்பட்டது. துவக்கத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையும், பின்னர் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் ஊதியங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. இப்படி மாற்றியமைக்கப்படுகின்ற ஊதியங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தம் போடுவதில்லை.

குறிப்பாக கடந்த 25 ஆண்டுகளில் 4 ஆண்டுகளுக்கான ஒரு ஒப்பந்தம் முடிந்து, மறு ஒப்பந்தம் போட குறைந்த பட்சம் 20 மாதங்களிலிருந்து 59 மாதங்கள் வரை கால இடைவெளி ஏற்பட்டுள்ளது.

1-1-1996 மற்றும் 1-1-2006-ல் மத்திய, மாநில அரசுகளுக்கு அமுல் படுத்தப்பட்ட 6-வது மற்றும் 7-வது ஊதியக்குழு பரிந்துரைகள் தொழிற் சங்கங்களின் வேண்டுகோளின்படி மின்சாரவாரியத்திற்கும் அமுல்படுத்தப்பட்டது.

தமிழக அரசு ஊழியர்களுக்கு 1-1-1996 ஊதிய விகிதம் தமிழக அரசின் அரசாணை எண். 162 நாள் 13.04.1998-ன்படி அமுல்படுத்தப்பட்டது.
இதை பின்பற்றி 01.12.1996 முதல் மின்சாரத் தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதம் 8.7.1998-ல் 20 மாதம் தாமதமாக அமுல்படுத்தப்பட்டது.

அதேபோல் 1.1.2006 ஊதிய விகிதம் தமிழக அரசாணை எண். 235, நாள் 1.6.2009-ன்படி அமுல்படுத்தப்பட்டது. இதை பின்பற்றி 1.12.2007 முதல் மின்சாரத் தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதம் 18.11.2009 முதல் 24 மாதங்கள் தாமதமாக அமுல்படுத்தப்பட்டது.

இதுவாவது பரவாயில்லை. ஒரு கொள்கையின் அடிப்படையில் சங்கங்களின் சம்மதத்துடன் ஏற்பட்ட தாமதமாகும். ஆனால் 1.12.1996 ஒப்பந்தம், 30.11.2000-டன் முடிவடைந்துவிட்டது. 1.12.2000 முதல் ஒப்பந்தம் போடப்படாமல் 2 ஆண்டுகாலம் கழித்து 1.12.2002 முதல் 30.11.2007 வரைக்கான ஒப்பந்தம் 59 மாதங்கள் கழித்து 15.10.2005-ல் தான் போடப்பட்டது. 1.12.2000-லிருந்து 30.11.2002 வரை 24 மாதங்களுக்கு பணப்பலனுமில்லை நிலுவைத் தொகையும் இல்லை. மாதம் ரூ.100- என்ற அளவில் 24 மாதங்களுக்கு ரூ.2400- மட்டுமே வழங்கப்பட்டது.

இவையெல்லாம் கடந்தகால வரலாறுகளாகும்

தற்போது நாம் எதிர்நோக்கியிருக்கும் ஊதிய உயர்வு 1.12.2015 முதல் 30.11.2019-வரைக்கான ஒப்பந்தமாகும். கடந்த காலங்களில் நாம் பின்பற்றி வந்த நடைமுறைப்படி, இதனை மத்திய மாநில அரசு ஊழியர்களின் 7-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கிட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டோம்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு 1.1.2016 முதலுக்கான ஊதிய உயர்வு, 2.57 (14.3%) மற்றும் 9 சதவிகிதம் இதரப்படிகள் பணப்பலன் 1.10.2017 முதல் வழங்கிட அரசாணை 303, நாள். 11-10-2017-ல் வெளியிடப்பட்டது.

உடனடியாக மின்வாரிய நிர்வாகமும், தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்கியதைப் போலவே மின்சாரத் தொழிலாளர்களுக்கும் 1.12.2015 முதல் 2.57 மடங்கு ஊதியத்தையும் இதரபடிகளையும், பணப்பலன் 1.10.2017 முதல் வழங்குவதற்கு 16.10.2017-ல் முன் வந்தது.

**ஆகவே 1.12.2015 முதல் 30.09.2017 வரையான இடைப்பட்ட 22 மாத காலம் தாமதமாக கருத முடியாது.**

நாம் 1.12.2015-லிருந்தே பணப்பலனும், நிலுவைத் தொகையும் கேட்டதால் பேச்சுவார்த்தை அக்டோபர் மாதம் இறுதிவரை நீடித்தது.

நவம்பர் திங்களில் மின்வாரியத்தலைவரை சந்தித்தபோது சங்கங்கள் விரும்பினால் நாளையே கூட 2.57 உயர்வுக்கு ஒப்பந்தம் போடத் தயார். அரசு ஊழியர்களுக்கு முன்தேதியிட்டு நிலுவைத்தொகை கொடுத்ததால் மின்சாரத் தொழிலாளர்களுக்கும் தரப்படும் என்ற சரத்தையும் ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறினார். ஆனால் நாம் உடன் படவில்லை.

டிசம்பர் திங்கள் ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததால் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.

அடுத்த மாதம் ஜனவரி 4-ல் போக்குவரத்து தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை நடைபெற்றது. 2.44 மடங்கு ஊதியஉயர்வுக்கு 12(3) ஒப்பந்தம் போடப்பட்டது. முக்கிய சங்கங்கள் சி.ஐ.டி.யூ, தொ.மு.ச. ஏற்றுக்கொள்ளவில்லை. வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. 8 நாட்கள் பஸ்கள் ஓடவில்லை. ஒரு லட்சத்திற்கும் (90%) மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அரசு மற்றும் மின்சாரத் தொழிலாளர்களுக்கு இணையாக தங்களுக்கும் 2.57 ஊதிய உயர்வு என்று கோரிக்கை வைத்தனர்.

அரசு ஊழியர்களுக்கு 2.57 ஊதிய உயர்வு 1.10.2017 முதல் வழங்கப்பட்டுவிட்டது. அதனை ஒப்பிட்டு அவர்கள் கேட்பதால் அரசு ஊழியர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

ஆனால் மின்சாரத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வுக்கு பேச்சு வார்த்தை மட்டுமே நடைபெற்றுக் கொண்டுள்ளது. இன்னும் முடியவில்லை. அதற்குள் வாரிய நிர்வாகம் நமக்கு கொடுத்த 2.57 முன்மொழிவுக் கடிதத்தை ஆவணமாக்கி தங்களுக்கும் அது போன்ற உயர்வு வேண்டும் என்று வலியுறுத்தியது. இதனால் மின்சாரத் தொழிலாளர்களுக்கு பின்னடைவு ஏற்பட்டது.

போக்குவரத்துத் தொழிலாளர்களின் 2.57 ஊதிய உயர்வு கோரிக்கையை தமிழக அரசு ஏற்க வில்லை. ஒப்பந்தப்படி 2.44 மட்டுமே வழங்கப்படும் என உறுதியாக நின்றது.

உயர்நீதிமன்றத்திற்கு சென்ற இப்பிரச்சனையில் தொழிலாளர்களின் 2.57 கோரிக்கைக்கு முடிவு காண ஒரு நடுவர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு, வேலை நிறுத்தம் 11.1.2018-ல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, 12.1.2018முதல் சகஜ நிலை திரும்பியது. நடுவர் நீதிமன்றத்தின் காலம் ஒரு மாதம் எனவும் அறிவிக்கப்பட்டது. விசாரணை நீதிமன்றத்திற்கான அரசாணை 1.2.2018-ல் வெளியிடப்பட்டது.

மேற்கண்ட சூழ்நிலையில் மின்சாரத் தொழிலாளர்களுக்கு 2.57 ஊதிய உயர்வுக்கு போடும் ஒப்பந்தம் போக்குவரத்தில் எதிர்வினையை ஏற்படுத்தும் என்பதால் ஓரிரு மாதங்கள் ஒப்பந்தத்தை தள்ளிபோடலாம் என்று தமிழக அரசு கருதுவதற்கு வாய்ப்புண்டு என்று நாம் கருதுகிறோம்.

தமிழக அரசு ஓய்வூதியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வூதியம் திருத்தப்படுவது போல் மின்வாரிய வளர்ச்சிக்கு வித்திட்டு ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் திருத்தப்படுகிறது. எனவே தமிழக அரசாணை எண்.313, நாள் 25.10.2017-ன்படி மின்வாரியத்திலும் 1.1.2016 முதல் 2.57 மடங்கு ஓய்வூதியம் திருத்தப்படும். இதில் எந்த ஐயமும் இல்லை.

மின்வாரியத்தில் ஊதிய உயர்வுடன் இணைந்து போடப்படவேண்டிய வேலைபளு மீதான பேச்சு வார்த்தையை இறுதிபடுத்தவும், நிலுவைத் தொகையில் ஒரு நியாயத்தைப் பெற்றிடவும் ஓரிரு மாதங்கள் தேவைப்படும். இதற்கிடையில் ஊதிய உயர்வு தாமதத்தால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார சிரமத்தை ஓரளவுக்கு சரிகட்ட, இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என்ற சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, பணியாளர்களுக்கு மாதம் ரூ.2500-ம் ஓய்வூதியதாரர்களுக்கு மாதம் ரூ.1250- வீதத்தில் 1.10.2017 முதல் 4 மாதங்களுக்கு ரூ.10,000- மற்றும் ரூ.5,000- நிலுவைத்தொகை 2.2.2018,3.2.2018-ல் வழங்கப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்தாகி ஊதிய உயர்வு வழங்கப்படும் மாதம் வரை இடைக்கால நிவாரணம் தொடரும்.

எனவே நாம் ஏற்றுக் கொண்டுள்ள நடைமுறைப்படி

7-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி 1.1.2016 முதல் 2.57 ஊதிய உயர்வு, 1.10.2017 முதல் பணப்பலனுடன் வழங்கிட தமிழக அரசு செப்டம்பர் மாதம் அறிவித்தப்பின் அடுத்த மாதமே, அதாவது அக்டோபர் மாதமே 1.12.2015 முதல் 2.57 ஊதிய உயர்வினை 1.10.2017 முதல் பணப்பலனுடன் வழங்குவதாக அறிவித்துவிட்டது.

எனவே ஊதிய உயர்வுப் பிரச்சனையில் நிர்வாகம் ஒரு மாதம் கூட தாமதம் செய்யவில்லை. மாறாக 1.12.2015 முதல் நிலுவைத் தொகையை நாம் வலியுறுத்துவதால் பேச்சு வார்த்தை இன்னமும் இறுதிநிலை அடையாமல் நிலுவையில்தான் உள்ளது.

இந்நிலையில்

**1) ஊதிய உயர்வு 26 மாதங்கள் தாமதமாகிவிட்டது என்பதும்,**

**2) ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை இறுதிபடுத்தப்பட்ட விவரங்களுடன் 12.02.2018-க்குள் ஒப்பந்தம் காண முற்படவில்லை என்பதும் உண்மைக்கு மாறானதல்லாவா?**

*மின்சாரத் தொழிலாளர்கள் சிந்திக்கும் திறன் உள்ளவர்கள்.*
*அவர்களை திசை திருப்ப முடியாது.*

தோழமையுள்ள

இ. சந்திரசேகரன்

பொதுச்செயலாளர்

*குறிப்பு : இன்று (05.02.2018) மின்வாரியத்தலைவர் மற்றும் மின்துறை அமைச்சரையும் மின்வாரியத் தலைமை அலுவலகத்தில்,**பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும்** 14 தொழிற்சங்கத்தினர் சந்தித்து, ஊதிய உயர்வு தற்போதைய நிலைமை குறித்து விவாதித்தோம். வரும் 7, 8 தேதிகளில் வேலைபளு சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும், விரைவில் 2.57-க்கான ஊதிய உயர்வு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. நிதித்துறைச்செயலாளர் கடிதத்தைப்பற்றியெல்லாம் யாரும் கவலைப்படத் தேவையில்லை. 2.57 ஊதிய உயர்வு கிடைக்க மின்வாரியத்தலைவரும், மின்துறை அமைச்சரும் தொழிலாளர் பக்கம் இருப்போம் என்பதைத் தெரிவித்தார்கள்.*

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள்,
கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.